திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, அரசியல், பொருளாதாரம் எடுத்துப் படிக்கின்ற மாணவர்கள் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு பெறுவதற்கு வாய்ப்பு இல்லை. ஆகவே, அவர்களுக்குக் குறைந்தபட்சம் ஓராண்டு பயிற்சி பெற்றிருந்தால் போதும் என்கிற நிலையை உருவாக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தத் துறையைப் பொறுத்தவரையிலும் போதுமான எண்ணிக்கையில் முதல் இரண்டாம் வகுப்புகளில் தேறியவர்கள் கிடைக்கவில்லை யென்றால், அப்பொழுது மூன்றாவது வகுப்பில் தேறியவர்கள் தேர்ந்தெடுக்கப் படுவார்கள்.

திரு.எஸ். முருகையன் : அரசாங்க ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் சேர வேண்டுமென்றால் முதல் வகுப்பில் தேறியிருக்க வேண்டும் என்றும், முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் கிடைக்கவில்லையென்றால், இரண்டாவது, மூன்றாவது வகுப்புகளில் தேர்ச்சி பெற்றவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால், தனியார் பயிற்சிக் கல்லூரிகளில் மூன்றாம் வகுப்பில் தேறியிருந்தாலும் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். முதல் வகுப்பில் தேறியவர்களுக்கு மட்டுந்தான் என்று அரசாங்கக் கல்லூரிகளில் விதிமுறையை வைத்துக்கொண்டிருக்கும்போது தனியார்க் கல்லூரியில் இதுபோல் வைத்துக்கொண்டிருப்பதை அரசாங்கம் கவனித்து, ஒன்று, முதல் வகுப்பில் தேறியவர்களைத் தான் முதலில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற விதி முறையைத் தனியார்க் கல்லூரியாக இருந்தாலும், அரசாங்கக் கல்லூரியாக இருந்தாலும் கடைப்பிடிக்க வேண்டும் என்று விதிக்க வேண்டும். அல்லது எந்த வகுப்பில் தேறினாலும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற முறையில் விதிமுறை மாற்றியமைக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே எல்லாக் கல்லூரிகளிலும் ஒரே முறை இருப்பது நல்லது. ஆனால் விருப்பப்படி செய்கிறார்கள் என்பதற்காக அரசாங்கக் கல்லூரிகளிலும் அவரவர்கள் விருப்பப்படி செய்வதென்றால், முதல் வகுப்பில் தேறியவர்கள் சேர்த்துக்கொள்ளப்படாமல் விடப்பட்டுவிட்டார்கள். மூன்றாவது வகுப்பில் தேறியவர்கள் சிபார்சின் அடிப்படையில் சேர்க்கப்பட்டுவிட்டார்கள் என்ற குறைபாடு சிபார்சு செய்கிறவர்களுக்கு வந்து சேரும், அவர்களைச் சேர்க்கிற மற்றவர்களுக்கும் வந்து சேரும். ஆகவே தான், அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நாம் கட்டுப்பாடான ஒருசில விதிகளைக் கடைபிடிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : முதல் வகுப்பு, இரண்டாவது வகுப்பு என்று பிறபட்ட மாணவர்களைப் பொறுத்தும் கடைப்பிடித்தால் அவர்களுக்கு அட்மிஷன் கிடைப்பதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. ஆகையால அவர்களுக்காக வேண்டி ஏதாவது மாற்று வழி அமைப்பதுபற்றி அரசு யோசிக்குமா ?